**செ.வெ.எண்-11** **நாள்-05.07.2018**

**அரியலூர் மாவட்டத்தில் மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு 2018-19 ஆம் ஆண்டிற்கான கடன் இணைப்பு (Credit Linkage) வழங்கும் முகாம்**

அரியலூர் மாவட்டத்தில் உள்ள மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு 2018-19ஆம் ஆண்டிற்கான கடன் இணைப்பு (Credit Linkage) வழங்கும் பொருட்டு வட்டார அளவில் வங்கி கடன் இணைப்பு முகாம்கள் 10.07.2018 அன்று அரியலூர் ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகத்திலும், 13.07.2018 அன்று ஆண்டிமடம் ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகத்திலும், 17.07.2018 அன்று செந்துறை ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகத்திலும், 20.07.2018 அன்று ஜெயங்கொண்டம் ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகத்திலும், 24.07.2018 அன்று தா.பழூர் ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகத்திலும், 27.07.2018 அன்று திருமானூர் ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகத்திலும் நடத்தப்படவுள்ளது.

**சுய உதவிக்குழுக்களுக்கான வங்கிக் கடன் இணைப்பு தர மதிப்பீட்டிற்கான தகுதிகள் :** தொடர்ந்து கூட்டம் நடத்தி அனைத்து பதிவேடுகளும் பராமரிக்க பட்டிருக்க வேண்டும். அனைத்து உறுப்பினர்களும் கூட்டத்தில் கலந்து கொண்டிருக்க வேண்டும். உள்கடன் மற்றும் வங்கி கடன் தவணை தவறாமல் திருப்பி செலுத்திருக்க வேண்டும். வங்கி சேமிப்பு புத்தகத்தில் வரவு மற்றும் செலவு பதியப்பட்டிருக்க வேண்டும்.

எனவே, தொடர்புடைய வட்டாரத்தில் உள்ள சுய உதவிக்குழுக்கள், தரமதிப்பீட்டிற்கான தகுதிகளை கொண்டிருந்தால் சுய உதவிக்குழு பதிவேடுகள் மற்றும் ஆவணங்களுடன் தரமதிப்பீடு மற்றும் வங்கிக்கடன் முகாமில் கலந்துகொண்டு பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.மு.விஜயலட்சுமி, இஆப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**